# இந்து சமய அறநிலையத்துறை

# அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேசுவரம்

## வேலைவாய்ப்பு அறிவிப்பு

**நாள்.07.02.2025**

இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம் வட்டம் மற்றும் நகர் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் காலியாக உள்ள கீழ்க்காணும் விபரப்படியான காலி பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் பணியாளர்களை நியமனம் செய்ய இந்து மதத்தைச் சார்ந்த தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. www.hrce.tn.gov.in மற்றும் **https://rameswaramramanathar.hrce.tn.gov.in/** வலைதளத்தில் கட்டணமில்லாமல் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்க வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்.12.03.2025 தேதி மாலை 5.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பதவியின் பெயர் | பணியிட எண்ணிக்கை | சம்பள விகிதம் ரூ | கல்வித்தகுதி |
|---|---|---|---|---|
| 1 | தமிழ்புலவர் | 1 | 18500–58600 Pay Matrix –22 | மாநிலத்தில் உள்ள ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தில் தமிழ் பாடத்தில் பி.லிட் அல்லது பி.ஏ (அல்லது) எம்.ஏ. (அல்லது) எம்.லிட் பட்டம் அல்லது அதற்கு இணையான கல்வித்தகுதி பெற்றிருத்தல் மற்றும் திருமுறைகள் ஒப்புவித்தலில் திறன் பெற்றிருத்தல் வேண்டும். |
| 2 | பிளம்பர் | 1 | 18000–56900 Pay Matrix –19 | அரசு/அரசு அங்கீகாரம் பெற்ற தொழில்துறை பயிற்சி நிறுவனம் (ஐ.டி.ஐ) நிறுவனத்தால் வழங்கப்பட்ட பிளம்பர் பாடப்பிரிவில் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் மற்றும் தொடர்புடைய பிரிவில் ஐந்தாண்டுகள் அனுபவம் அல்லது இரண்டாண்டுகள் தொழில் பழகுநர் (Apprenticeship) அனுபவம் பெற்றிருக்க வேண்டும். |
| 3 | காவலர் | 18 | 15900–50400 Pay Matrix –17 | தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும் |
| 4 | கருணை இல்லம் காப்பாளர் (பெண்) | 1 | 15900–50400 Pay Matrix –17 | தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும் |
| 5 | துப்புரவுப்பணியாளர் | 27 | 10000–31500 Pay Matrix –10 | தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும் |
| 6 | தூர்வை (Sweeper) | 26 | 10000–31500 Pay Matrix –10 | தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும் |
| 7 | கால்நடை பராமரிப்பு (கோசாலை) | 2 | 10000–31500 Pay Matrix –10 | தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும் |

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

**இணை ஆணையர்/ செயல் அலுவலர்,**
**அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேசுவரம் நகர் மற்றும் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம் – 623 526.**

திருமதி. பா. பாரதி, பி.எல்.,
தக்கார்/இணை ஆணையர்
அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில்,
இராமேசுவரம்.

திரு. செ. சிவராம்குமார், பி.எஸ்சி., பி.எல்.,
இணை ஆணையர்/செயல் அலுவலர்
அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில்,
இராமேசுவரம்.

## <u>நிபந்தனைகள்</u>

1) விண்ணப்பதாரர் 01.07.2025 அன்று 18 வயது பூர்த்தியடைந்தவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
2) இந்து மதத்தை சார்ந்தவராகவும், இறை நம்பிக்கை உடையவராகவும் இருத்தல் வேண்டும். தமிழ்நாட்டைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.
3) பணிநியமனம் அரசாணை (நிலை) எண்.114 சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி.4–2) நாள்.03.09.2020 விதிகளுக்குட்பட்டது. அரசாணை எண்.219 சுற்றுலா,பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி.4–2) நாள்.02.09.2022 விதிகளுக்குட்பட்டது.
4) அரசாணை (நிலை) எண்.114, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(அ.நி.4–2) துறை நாள்.03.09.2020 விதி எண்.9–ன்படி முதுநிலை அல்லாத திருக்கோயில்களில் பணிபுரியும் தகுதியான பணியாளர்கள் விண்ணப்பிக்கலாம்.
5) நேரடிநியமனம் இந்துசமயஅறநிலையத்துறை சட்ட விதிகளுக்குட்பட்டவை.
6) நீதிமன்றத்தில் தண்டனை அடைந்தவர்கள், பட்ட கடனை தீர்க்க முடியாதவர்கள் என நீதிமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டவர்கள் அரசுப்பணியிலிருந்து பொது ஸ்தாபனங்களில் இருந்தும் பணிபுரிந்து தண்டனை காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள், திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள், அவர்களின் வாரிசுதாரர்கள் ஆகியோர்கள் மேற்படி பணிக்கு விண்ணபிக்க தகுதியற்றவர்கள்.
7) எந்த ஒரு திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள், அவர்களின் வாரிசுதாரர்கள் அரசுபணி மற்றும் பொது ஸ்தாபனங்களிலிருந்தும், இதர திருக்கோயில்களிலிருந்தும் பணிபுரிந்து தண்டனை காரணமாக பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.
8) திருக்கோயில் நிர்வாக நலனுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள், போராட்டம், ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.
9) ராஜுகத்தாலும் தெய்வீகத்தாலும் ஏற்படும் மாற்றங்களுக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.
10) வேலைவாய்ப்பு விண்ணப்ப படிவத்தினை <u>www.hrce.tn.gov.in</u> மற்றும் **<u>https://rameswaramramanathar.hrce.tn.gov.in/</u>** என்ற இணைய தளத்தில் இருந்து மட்டுமே பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.
11) <u>www.hrce.tn.gov.in</u> மற்றும் **<u>https://rameswaramramanathar.hrce.tn.gov.in/</u>** வலைதளத்தில் உள்ள விண்ணப்படிவம் அல்லாது வேறு வடிவில் தட்டச்சு செய்தோ/நகல் எடுத்தோ/வேறு வடிவங்களிலோ வரப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது
12) ஒன்றுக்கு மேற்பட்ட பணிகளுக்கு விண்ணபிக்க விரும்புவோர் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக பதிவிறக்கம் செய்து விண்ணபங்களை அனுப்ப வேண்டும்.
13) தேர்வு செய்யப்படும் பணியாளர் இத்திருக்கோயிலின் உபகோயில்களுக்கும், உபநிறுவனங்களுக்கும் பணியிட மாறுதல் செய்யப்படுவார்.
14) தொற்றுநோய் / உடல் மற்றும் மனநிலை குறைபாடுகள் உள்ளவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.
15) விண்ணப்பதாரர் நல்ல தேக ஆரோக்கியம் உள்ளவராக இருக்க வேண்டும்.
16) ஒன்றுக்கு மேற்பட்ட பணியிடங்களில் விண்ணப்பிப்பவர்களுக்கு ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக எழுத்துத் தேர்வு / நேர்முகத் தேர்வு நடத்தப்படும்.
17) நேர்முகத்தேர்வில் கலந்து கொள்வதற்கு எவ்வித பயணப்படியும் வழங்கப்படமாட்டாது.

18) விண்ணப்பத்துடன் கல்வித்தகுதிக்குரிய சான்றிதழ்கள், கூடுதல் சான்றிதழ்கள், ஆதார்/வாக்காளர் அடையாள அட்டை/குடும்ப அட்டை மற்றும் நன்னடத்தைச் சான்று போன்ற பிற ஆவணங்களின் நகல்களை சுயசான்றொப்பம் செய்து (Self Attested) இணைக்கப்பட வேண்டும். (அசல் சான்றிதழை எக்காரணம் கொண்டும் அனுப்பக்கூடாது).

19) விண்ணப்பதாரர் வசிக்கும் எல்லைக்குட்பட்ட காவல் நிலையத்தில் விண்ணப்பதாரர் மீது குற்றவியல் நடவடிக்கை ஏதும் இல்லை என்ற சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

20) விண்ணப்பங்களை அனுப்பும் போது மேல் உறையின் மீது கண்டிப்பாக பதவியின் பெயரை குறிப்பிட்டு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

21) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத்தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்ப வேண்டும்.

22) இந்த வேலை வாய்ப்பு அறிவிப்பு வெளியிடும் தேதிக்கு முன்னதாக வரப்பெற்ற விண்ணப்பங்களும், **12.03.2025 தேதி மாலை 5.45 மணிக்கு பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.**

23) விண்ணப்ப படிவத்தில் விவரங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாமலும், கேட்கப்பட்ட சான்று நகல்கள் இணைக்கப்படாமலும் வரப்பெரும் விண்ணப்பங்கள் ஆரம்பநிலையிலேயே நிராகரிக்கப்படும்.

24) தகுதியான விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

25) நன்னடத்தை உடையவராக இருக்க வேண்டும். இதற்கு அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரியிடம் நன்னடத்தைச் சான்று பெற்று சமர்ப்பிக்க வேண்டும்

26) வேலைவாய்பு அறிவிப்புப் பட்டியலில் கண்ட வரிசை எண்.4–ல் குறிப்பிட்டுள்ள பணியிடத்திற்கு பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கப்பட வேண்டும்.

27) விண்ணப்பதாரர் வயதிற்கான சான்று ஆவணமாக பிறப்பு சான்றிதழ் நகல் அல்லது கல்வி நிலையத்தால் வழங்கப்பட்ட மாற்று சான்று (Transfer Certificate) / மதிப்பெண் சான்று (Mark Sheet) நகல் இணைக்கப்பட்ட வேண்டும்.

28) விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் கல்வி தகுதி மற்றும் பிற தகுதிக்குரிய ஆவணங்களின் அசல் சான்றிதழ்கள் நேர்முக தேர்வின்போது கண்டிப்பாக கொண்டு வரப்பட வேண்டும்.

29) விண்ணப்பதாரரால் தெரிவிக்கப்படும் விவரங்கள் அனைத்தும் சரியானவை என உறுதியளிக்க வேண்டும். தவறான தகவல்கள் அல்லது போலியான ஆவணங்கள் ஏதேனும் அளித்து பணி நியமன ஆணை பெறப்படும் பட்சத்தில் எவ்வித முன் அறிவிப்புமின்றி பணி நீக்கம் செய்யப்படுவதுடன், சட்ட ரீதியான குற்றவியல் நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படுவர்.

30) நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும். மேலும், தகுதியான விண்ணப்பதாரர்கள் மட்டுமே பரிசீலனைக்கு பின்னர் நேர்முக தேர்விற்கு அழைக்கப்படுவர் தகுதி இல்லாத / குறைபாடுகளுடன் வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

31) விண்ணப்பதாரர்களால் வழங்கப்படும் சான்றுகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட துறைகளின் மூலம் உண்மைத்தன்மை குறித்து பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.

32) தேர்வு முறையானது அடிப்படை கல்வித்தகுதி, அனுபவம், செயல்முறை தேர்வுகள் கூடுதல் தகுதி மற்றும் நேர்முக தேர்வு ஆகியவற்றில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் நடைபெறும்.

33) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய சான்றுகளுடன், அஞ்சல் உறையில் "பணியிட வரிசை எண்.___" மற்றும் "____________பணியிடத்திற்கான விண்ணப்பம்" என தெளிவாக பெரிய எழுத்துக்களில் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

34) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்துடன் நேர்முக தேர்வுக்கு அழைப்பாணை அனுப்ப ரூ.25/-மதிப்புள்ள அஞ்சல் வில்லை ஒட்டிய சுயவிலாசமிட்ட (Self Address) அஞ்சல் உறையுடனும் இணைத்து அனுப்பப்பட வேண்டும். "மேலும் உரிய இணைப்புகள் மற்றும் சுய விலாசமிட்ட அஞ்சல் உறை இல்லாமல் வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

35) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **நாள்.12.03.2025 தேதி பிற்பகல் 5.45 மணிக்குள் வந்து சேர வேண்டும்.**

36) இதர விவரங்களை இத்திருக்கோயில் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் அல்லது www.hrce.tn.gov.in மற்றும் https://rameswaramramanathar.hrce.tn.gov.in/ என்ற திருக்கோயில் இணைய தளத்தில் தெரிந்துகொள்ளலாம்.

37) **விண்ணப்பதாரர் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி**
**இணை ஆணையர்/செயல் அலுவலர்**
**அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில்**
**இராமேசுவரம் – 623 526, இராமநாதபுரம் மாவட்டம்.**

திருமதி. பா. பாரதி, பி.எல்.,
தக்கார் / இணை ஆணையர்
அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில்,
இராமேசுவரம்.

திரு. செ. சிவராம்குமார், பி.எஸ்சி., பி.எல்.,
இணை ஆணையர்/செயல் அலுவலர்
அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில்,
இராமேசுவரம்.

விண்ணப்ப படிவம் பதிவிறக்கம் செய்ய

இங்கு கிளிக்செய்யவும்